## 47. உம்மைவிட்டால் யாருண்டு

### பல்லவி

உம்மைவிட்டால் யாருண்டு இயேசய்யா
உம்மைவிட்டால் யாருமில்லையே இயேசய்யா

### அனுபல்லவி

*நீர் என் அடைக்கலமானீர்*
*நீர் என் கோட்டையுமானீர்*

### சரணங்கள்

1. என் தாயின் வயிற்றிலே என்னை
உருவாகுமுன்னே அறிந்தீர் - 2
கருவில் வெளிபடும் முன்னே
உமக்குள்ளே தெரிந்து கொண்டீர்
- உம்மைவிட்டால்

2. யாரிடம் போவோம் நாங்கள்
விடுதலை எங்கும் இல்லையே
உம்மிடத்தில் நித்திய
ஜீவ வசனம் உண்டு
- உம்மைவிட்டால்

3. நொருங்ககுண்ட இருதயத்தை
என்றும் உயிர்பிக்கிறீர்
நொறுங்குண்டு பணிந்தவனில்
நீரே வாசம் பண்ணுவீர்
- உம்மைவிட்டால்